**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**க.பொ.த (உ/த) வகுப்பு மாதிரிப் பரீட்சை - 2020**
**கர்நாடக சங்கீதம்**

**தரம் 13** **புள்ளித்திட்டம்**

# பகுதி – 2

## வினா இல 1

1. ஸரிகமபதநிஸ்
   ஸ்தபமரிஸ
2. ஸ்ரோதோவஹயதி
3. மகிழ்ச்சியை நோக்கிச் செல்லுதல் எனப் பொருள்படும்
4. யாழ்முரிப்பண்
5. இடையழகு
6. முத்துஸ்வாமிதீட்சிதர்
7. ஸ்வாதித்திருநாள்மகாராஜா
8. மந்திரஸப்தக மத்தியஸப்தக தாரஸப்தக
9. 7ஆம் 8ஆம் 9ஆம் நூற்றாண்டுகளில
10. தரிசனஅஸ்டபதி. சஞ்சீவிஅஸ்டபதி
11. Flat Sharp
12. திருவிருத்தம், திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை, திருநேரிசை
    ( நான்க் எழுதியிருப்பின் 2 புள்ளி )
13. கடம் குழல்
14. ஜல்லரி சல்லரி
15. ஜால் திரிதால் பாஸ்டோ ( இவற்றில் இரண்டு எழுதியிருப்பின' இரண்டு புள்ளி )

**1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு 1 x 10 = 10 புள்ளிகளும்**

**11 தொடக்கம் 15 வரையான 5 வினாக்களுக்கும் 5 x 2 = 10 புள்ளிகளுமாக மொத்தம் 20 புள்ளிகள் வழங்கவும்**

## வினா இல 02

1. கமகம் என்பது ஸ்வரங்களையோ ஸ்வரக்கோர்வைகளையோ பாடும் போதோ அல்லது வாசிக்கும் போதோ தக்க இடங்களில்தக்கவாறுஅசைவுகளைப்பிடித்து ராக ஸ்வரூபத்தினை வெளிப்படுத்தல் ஆகும்
கர்நாடக சங்கீதுத்திற்கு கமகம் உயிர்நாடி போன'றதாகும்

2. சங்கீதமகரந்தம் – நாரதர்
சங்கீதரத்னாகரம் – சாரங்கதேவர்

3. ஆரோகண கமகம்:
அவரோகண கமகம்:
டாலு கமகம்
ஸ்புரித கமகம்:
கம்பித கமகம்:.
ஆகத கமகம்
பிரத்தியாஹத கமகம்
திரிபுச்சம்: கமகம்
ஆந்தோளித கமகம்
மூர்ச்சனை கமகம்

4. :

1. . ஆரோகண கமகம்: ஆரோகண வரிசையில் அமைந்துள்ள ஸ்வரக்கோர்வைகளில் அசைவினால் தோன்றுவது ஆரோகண கமகம் (ஏற்றஜாரு ஒடுக்கல்) ஆகும
   உ-ம் : ஸ ரி க ம ப த நி ஸ
2. . அவரோகண கமகம்: அவரோகண முறையில் அமைந்துள்ள ஸ்வரக்கோர்வைகளின் அசைவினால்தோன்றுவதுஅவரோகண கமகம் (இறக்கஜாரு ஒடுக்கல்) ஆகும்.
   உ-ம் : ஸ் நி த ப ம க ரி ஸ
3. டாலு: பாடும் போதோ அல்லது இசைக்கருவிகளில் வாசிக்கும் போதோ கீழ் ஸ்தானத்திலிருந்து கொண்டே மேல் ஸ்தானத்தை எழுப்பும் போது உண்டாகும் கமகம் டாலு எனப்படும். (இது வலி என்னும் கமகத்திற்கு ஒத்தது)உ-ம் : ஸகா - ஸமா – ஸபா
4. ஸ்புரித கமகம்: ஜண்டை ஸ்வரங்களில் வரும் முதல் ஸ்வரத்தை சாதாரணமாகவும் இரண்டாவதாக வரும் ஸ்வரத்தை அடித்து பிடிக்கையில் வரும் கமகம் ஸ்புரித கமகம் எனப்படும். (இதனை தமிழில் அடுக்கல் என்பர். தமிழில் நான்கடுக்குஇ ஆறடக்கு முதலியனவும் இரட்டை அடுக்கல்களாகவே வரும்)
   உ-ம் : ஸஸ ரிரி கக மம
5. கம்பித கமகம்: ஸ்வரங்களை தக்க இடங்களில் தக்க அளவில் கம்பீரமாக அழுத்தமாக அசைத்துப் பாடும் போது ஏற்படும் கமகம் கம்பித கமகம் ஆகும். (இதனைத் தமிழில் கம்பலை என்பர்)
   உ-ம் : தன்யாஸி இராகத்தில் ஸகாமபநிஸ்இ இதில் “க“ வும்இ “நி“ யும் கம்பீரமாக அழுத்திப் பாடப்படுகிறது. அதே போல் அடாணாவில் ஸ்நிதாபமகாரிஸ. இதில் “த“ வும்இ “க“ வும் அழுத்திப் பாடப்படுகிறது.
6. ஆகத கமகம்: ஸரி - ரிக - கம - மப போன்ற ஸ்வரக்கோர்வைகளை தக்க முறையில் அசைத்துப் பாடுதல் ஆகத கமகம் ஆகும்.

7. பிரத்தியாகத கமகம்: ஸ்நி - நித - தப - பம போன்ற ஸ்வரக்கோர்வைகளைத் தக்க முறையில் அசைத்துப் பாடுதல் பிரத்தியாகத கமகம் ஆகும்.
8. திரிபுச்சம்: ஸ்வரங்களை ஸஸஸ ரிரிரி ககக மமம என்று மும்மூன்று ஸ்வர அமைப்பு முறையில் பிடிக்கும் போது ஏற்படும் கமகம் திரிபுச்சம் ஆகும். (தமிழில் மூவடுக்கல்)
9. ஆந்தோளித கமகம்: ஸரிஸதாதஇ ஸரிஸபாபா என்ற முறையில் வீணை போன்ற இசைக்கருவிகளை வாசிக்கும் போது கீழுள்ள ஒரு ஸ்வரத்தின் மேல் சிறிது நின்று பின் தந்தியை இழுத்தோ அல்லது விரலை நகர்த்திச் சென்றோ மேல் ஸ்வரத்தைப் பிடிக்கும் போது ஏற்படும் கமகம் ஆந்தோளித கமகம் ஆகும்.
10. மூர்ச்சனை கமகம்: ஸ்வரக் கோர்வையிலுள்ள ஸ்வரங்களை மிகத் துரிதமாக பிடித்து ஒவ்வொரு ஸ்வரக்கோர்வையின் கடைசி ஸ்வரத்தின் மேல் நிற்கும் போது ஏற்படும் கமகம் மூர்ச்சனை கமகம் ஆகும்.
    உ-ம் : ஸரிகமபதநீ - ரிகமபதநிஸா – கமபதநி

| | |
|---|---|
| **கமகம் வரைவிலக்கணம்** | **- 3 புள்ளி** |
| **நூல்கள்** | **- 2 புள்ளி** |
| **தசவித கமகங்களில் 5 எழுதியிருப்பின்** | **- 5 புள்ளிகள்** |
| **ஐந்தினை விளக்கியிருப்பின்** | **- 5 X 2 = 10 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **- 20 புளிளிகள்** |

## வினா இல – 03

### சாரங்கி

**தோற்றம்**

இவ் வாத்தியம் 17ம் நூற்றாண்டில் வழக்கிலிருந்தது

சுாரங்கவீணா என்ற பெயருடன் சங்கீதரத்னாகரம் பார்ஸ்வபுராணம் சங்கீததர்பபணம் போன்ற நூல்களில் காணப்படுகிறது

**அமைப்பு**

சாரங்கி வாத்தியம் மரத்தினாலானது

60 cm நீளமுடையது
சுருதி கூட்டுவதற்கு நான்கு பிரடைகள் உள்ளன
கீழ்ப்பகுதியின் மத்தியில் பாலம் அமைக்கப்பட்டுள்ளது
தற்காலத்தில் சாரங்கியில் 30 – 40 அனுதாபத்தந்திகள் காணப்படுகிறது

இவை சிறிய பிரடைகளில் சுற்றப்பட்டிருக்கும்
நரம்புகள் மாட்டின் குடலினால் செய்யப்பட்டது

**சிறப்பு (உபயோகம்)**

வட இந்திய அசையில் பிரதான பக்க வாத்தியமாக வாசிக்கப்படுகிறது
இது தனியாக வாசிப்பதற்கும் வாய்ப்பாட்டிற்கு பக்க வாத்தியமாக வாசிப்பதற்கும் ஏற்றதாக விளங்குகிறது.
இதில் எல்லா விதமான கமகங்களையும் வாசிக்க முடியும்
இது கதக் நடனத்திற்கு பக்க வாத்தியமாக வாசிக்கப்படுகிறது
தபேலா தனிக்கச்சேரிக்கும் சாரங்கி பக்க வாத்தியமாக பயன்படுத்தப்படுகிறது
தென்னிந்தியக் கொவில்களில் ஓதுவார்கள் தேவாரம் பாடும் போது சாரங்கியை பக்க வாத்தியமாக பயன்படுத்தினர்

**வாசிக்கும்முறை**

வாசிக்கும் பொழுது இதன் அடிப்பாகம் மடியில் வைத்து வாசிக்கப்படுகிறது
குதிரை மயிரினாலான வில்லினை வலது கையில் பிடித்து வாசிப்பர்
இடது கை ஸ்வரஸ்தானங்களை வாசிப்பதற்கு பயன் படுத்தப்படுகிறது

**சுருதிகூட்டும்முறை**

வாசிக்கும் தந்திகளுக்கு ஏற்ப அனுதாபத்தந்திகள் சுருதி கூட்டப்படும் அதாவது வாசிக்கும் இராகத்தின் ஸ்வரஸ்தானங்களுக்கு ஏற்ப அனுதாபத்தந்திகள் சுருதி கூட்டப்படும்

வாசித்துப்பிரபல்யமடைந்தோர்

அலாவுதீன்கான்
பண்டிட் நாரயணராவ்
அப்துல்லாதீன்கான்
துருபகோஸ்

| | |
|---|---|
| **தோற்றம்** | **- 2 புள்ளிகள்** |
| **அமைப்பு** | **- 2 புள்ளிகள்** |
| **வாசக்கும்முறை** | **- 1 புள்ளி** |
| **சுருதி கூட்டும்முறை** | **- 2 புள்ளி** |
| **சிறப்பு உபயோகம்** | **- 2 புள்ளி ( 4 கருத்துக்கள் எழுதியிருப்பின் )** |
| **பிரபல்யமநைந்தோர் இருவர் பெயர்** | **- 1 புள்ளி** |

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

# கிற்றார்

**தோற்றம்**

16 ம் நூற்றாண்டிலே கிற்றார் வாசிக்கும் முறையில் சில் மாற்றங்கள் ஏற்பட்டன
இம்மாற்றம் ஸ்பெயின் நாட்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதால் கிற்றார் Spanish Guthar என்று அழைக்கப்படுகிறது
சாஸ்திரிய ரீதியான வாசிப்பு முறை 16 ம் நூற்றாண்டிலேயே ஆரம்பமானது
முதன் முதலாக கிற்றார் வாத்தியத்தில் வாசிக்க் கூடிய உருப்படிகள் கி. பி. 554 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டன
ஸ்பெயின் தென்அமெரிக்க நாட்டுவாக்கேயகாரர்களே பெருமளவில்கிற்றாரில் வாசிக்கக் கூடிய உருப்படிகளை இயற்றியுள்ளனர்
அதில் விசேடமான வாசிப்பு முறை கோட் முறையாகும்

**அமைப்பு**

இவ் வாத்தியம் தட்டையான மேற் பாகத்தினையும் கீழ்பாகத்தினையும் மெட்டுக்களை கொண்ட விரற்பலகையையும் கொண்டது
மெட்டுக்கள் உலோகத்தினாலானவை இவை அரை ஸ்வரங்கள் வாசிப்பதற்காக அமைந்துள்ளன
சாஸ்திரீய சங்கீதம் வாசிக்கும் கிற்றார் 6 தந்திகளை உடையது
இவை நைலோனிலோ அல்லது உலோகத்திலோ ஆனது. முற்காலத்தில் விலங்கின் குடலினால் செய்யப்பட்டது

**சிறப்பு ( உபயோகம் )**

மேலைத்தேச இசையில் தனிவாதியமாகவும் பக்கவாத்தியமாகவும் வாசிக்கப்படுகிறது
பாரமற்ற வாத்தியமாகையால் எங்கும் எடுத்துச்செல்லக் கூடிய வசதி கொண்டது
மிக மென்மையான நாதத்தினைக் கொண்டது
கோட் வாசிப்பு
இவ்வாத்தியத்தில் நன்கு வாசிக்க கூடியதாக உள்ளது சிறப்பானதாகும்
தற்காலத்தில் மூன்று வகையான கிற்றார்கள் வழக்கத்தில் உள்ளன

பேஸ் கிற்றார்
ரிதம் கிற்றார்
லீட்கிற்றார்

ஏலெக்ரிக்கிற்றார்--Ascoustic போன்றதாகும் இன்றைய உலகில் றொக் சங்கீததிதில் இது பிரபல்யமானது
இவ் வாத்தியத்தில் ஒரே ஸ்வரத்தில் நீண்ட நேரம் நிறுத்தி வாசிக்ககூடியது சிறப்பானதாகும்
பேஸ் கிற்றாரரும் எலெக்ரிக் வாத்யமே எனினும் இது நான்கு தந்திகளை உடையது

**வாசிக்கும்முறை**

வலது கை விரல்களினால் தந்திகளை நிறுத்தி வாசிப்பர் அதில் பல விதமான வாசிப்பு முஜறகளைக் கையாளலாம்
இதில் பாட்டோடு தாளமும் இணைந்து வாசிக்கப்படும்

**சுருதிகூட்டும்முறை**

இவ்வாத்தியத்தின் ஆறு தந்திகளும் முறையே இடமிருந்து வலமாக பின்வருமாறு சுரதி கூட்டப்படுகிறது

1. ஆவது தந்தி தாரஸ்தாயி க – F
2. ஆவது தந்தி மத்யஸ்தாயி நி - B
3. ஆவது தந்தி மத்யஸ்தாயி ப - G
4. ஆவது தந்தி மத்யஸ்தாயி ரி - D
5. ஆவது தந்தி மத்யஸ்தாயி த - A
6. ஆவது தந்தி மந்திரஸ்தாயி க – E

பிரபல்யம் வாய்ந்த சில கிற்றார் விற்பன்னர்கள்

Ferando sor ( 1778 – 1837 )
Francisco tarrega ( 1854 – 1909 )

| | |
|---|---|
| **தோற்றம்** | **- 2 புள்ளிகள்** |
| **அமைப்பு** | **- 2 புள்ளிகள்** |
| **வாசிக்கும்முறை** | **- 1 புள்ளி** |
| **சுருதி கூட்டும்முறை** | **- 2 புள்ளி** |
| **சிறப்பு உபயோகம்** | **- 2 புள்ளி ( 4 கருத்துக்கள் எழுதியிருப்பின் )** |
| **பிரபல்யமடைந்தோர் இருவர் பெயர்** | **- 1 புள்ளி** |

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

- **வினா இல – 3 இற்கான மொத்தப்புள்ளிகள் - 20**

## வினா இல 4

# கீரவாணி

- ஆரோகணம்: ஸ ரி2 க2 ம1 ப த1 நி3 ஸ்
- அவரோகணம்: ஸ் நி3 த1 ப ம1 க2 ரி2 ஸ
- வேத என்றழைக்
- கப்படும் 4 வது சக்கரத்தில் 3 வது மேளம்.

- இந்த இராகத்தில் ஷட்ஜம் சதுஸ்ருதிரிஷபம் சாதாரண காந்தாரம் சுத்த மத்திமம் பஞ்சமம் சுத்த தைவதம் காகலி நிஷாதம் ஆகிய சுரங்கள் வருகின்றன.

- பிரதியாகத கமகம் இந்த இராகத்தின் சாயலை நன்கு வெளிப்படுத்தும்.
  இதன் மத்திமத்தை பிரதி மத்திமாக மாற்றினால் இராகம் சிம்மேந்திரமத்திமம் ஆகும்.

- இது ஒரு மூர்ச்சனாகாரக மேளம். இதன் மத்திமம் பஞ்சமம் தைவதம் முறையே கிரக பேதத்தின் வழியாக ஹேமவதி வகுளாபரணம் கோசலம் இராகங்கள் கொடுக்கும்.

- மேல்நாட்டு இசையில் ஹார்மோனிக் மைனர் (Harmonic Minor Scale) என்பது கீரவாணி இராகமே.

  - நியாச ஸ்வரங்கள் – ரி ப நி
  - ஜீவஸ்வரங்கள் – ரி ம ப நி
  - எப்பொழுதம் பாடலாம்
  - பக்தி ரஸத்தை உணர்தும் ராகம்
  - விஸ்தாரமான ஆலர்பனைக்கு இடங் கொடுக்கும்

- உருப்படிகள்
- கிருதி : கலிகியுண்டேகதா : ஆதி : தியாகராஜ சுவாமிகள்.
- கிருதி : இன்னமும் சந்தேக :மிஸ்ர சாபு : கோபாலகிருஷ்ண பாரதியார்
- கிருதி : தேவி நீயே : ஆதி : பாபநாசம் சிவன்.
- கிருதி : வேலவா வினை தீர : மிஸ்ர ஜம்பை : கோடீஸ்வர ஐயர்.
- கிருதி : உனை நம்பினேன் ஐயா : ஆதி : முத்துத் தாண்டவர்.

சஞ்சாரம்

- நிதபம கரிகம-பதநிஸ் ரிக்ம்க்-கிரிஸ்நி-தநிஸ்நி-தபமக கரிஸா
- ரிகமப தநிஸ்ஸ்-தநிஸ்ரிக்ம் கிரிஸ்நி-ரிஸ்ஸ்நிதபதநி-ஸ்நிதபமகரிஸ

## ஆபோகி

• இது ஒரு ஜன்ய ராகம். தாய் இராகம்.

• 22வது மேளமாகிய கரகரப்பிரியா

ஆ ஸரிகமதஸ்

அ ஸ்தமகரிஸ

• இந்த ராகத்தில் வரம் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சதுஸ்ருதிரி'பம், சாதாரணகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம்.

• வர்ஜ ராகம். ப, நி வர்ஜ ஸ்வரங்கள்,

• ஔடவ ராகம், திரிஸ்தாயி ராகம், உபாங்க ராகம்.

• க, ம, த ஜீவஸ்வரங்கள்.

ரி, ம, த நியாய ஸ்வரங்கள்.

• ஸ, ரி ஆகிய ஸ்வரங்களில் பெரும்பாலும் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன. எப்போதும் பாட ஏற்ற இராகம்.

• சுலோகங்கள் விருத்தங்கள் பாட ஏற்ற ராகம்.

• இசை நாட்டிய நாடகங்களில் பயன்படுத்தப்படும் இராகம். ஓரளவுஆலாபனை செய்ய ஏற்ற ராகம்.

• சர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம்.

• எல்லா வகையான உருப்படிகளும் இந்த ராகத்தில் உண்டு.

• பக்திச் சுவையுடைய ராகம்.

• கச்சேரியின் ஆரம்பத்தில் பாட ஏற்ற ராகம்.

• மூர்ச்சனாகாரக ஜன்ய ராகம். இதன் மத்ய மூர்ச்சனை வலஜி ராகமாகும். தியாகராஜசுவாமிகளால் பிரசித்திக்கு வந்த ராகம்.

• **சஞ்சாரம்**

தஸ்தமகரிகமதஸா - தஸ்ரிஸா - தஸ்தமகம கரிஸா - ஸரிகம தமகரிகமதஸ்

தமகரிஸரிகம - தமதஸ்ரிக்ம்க்ம்ரிஸா - ஸ்தமகரிஸாத - ஸரிகமதமக மதஸ்ரீக்ரிஸா

• உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனை | சபாபதிக்கு | ரூபகம் | கோபாலகிரு'ணபாரதியார் |
| வர்ணம் | எவ்வரி | ஆதி | பட்டணம் சுப்பிரமணியய்யர் |
| கீர்த்தனை | சேவிக்க | ஆதி | முத்துத்தாண்டவர் |

# ஹம்சத்வனி

- இது ஒரு ஜன்னிய ராகம். தாய் இராகம்.
- 29வது மேளகர்த்தாவாகிய சங்கராபரணம்.

  ஆ: ஸரிகபநிஸ்

  ஆ: ஸ்நிபகரிஸ

- இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சதுஸ்ருதிரி'பம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், காகலிநிஷாதம்.
- இது ஒருவர்ஜ ராகம்.
- ஆரோகணத்திலும் அவரோகணத்திலும் ம, த வர்ஜ ஸ்வரம்,
- ஔடவ ராகம், உபாங்க ராகம். திரிஸ்தாயி இராகம் - புராதன ராகம். கச்சேரியில் ஆரம்பத்தில் பாட ஏற்ற ராகம்.
- வீர ரசமான ராகம். கம்பீரம் நிறைந்த ராகம்.
- ''நி'' ஜீவ ஸ்வரம். ஸர்வ ஸ்ர்வ கமக வரிக ரத்தி இராகம்.
- உருப்படிகள் ஸ, க, ப ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.
- எல்லா ஸ்வரங்களும் நியாய ஸ்வரங்கள்.
- நீண்ட நேர ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்.
- இந்த ராகத்தில் எல்லா வகையான உருப்படிகளும் உண்டு.
- இசை நாட்டிய நாடகங்களில் உபயோகிக்கப்படும் இராகம்.
- எல்லா நேரங்களிலும் பாட ஏற்ற இராகம்.
- **சஞ்சாரம்**

கபநீ பகரி-கபநி பநிஸ் க்ரிஸா – நிபநீஸ்ாஸ் - பநிஸ்ரீரி – பநிஸ்ரிகா்க்ரிஸா

கபநிஸ்ரிகா்ரி ஸ்நிபநிஸ்நிபகப – நிபகரிகரிஸநிபநிஸா – நிஸரிகரிஸா

- **உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனை | மூலாதாரமூர்த்தி | ஆதி | பாபநாசம் சிவன் |
| வர்ணம் | ஜலஜாக்ஷி | ஆதி | மானம்பு சாவடி வெங்படசுப்பய்யர் |
| கீர்த்தனை | வந்தேநிஸமகம் | ஆதி | வாசுதேவாச்சாரியார் |

# சாவேரி

- இவ்இராகம் 15வது மேளகர்த்தா இராகமாகிய ”அக்னி” என்றழைக்கப்படும் 3வது சக்கரத்தின் 3 வது மேளமாகிய மாயாமாளவகௌளையின் ஜன்னிய இராகம் ஆகும்
- . எப்போதும் பாடக் கூடிய இவ்விராகம் ஔடவ- சம்பூர்ண இராகம் ஆகும்.
- பழைமையான ராகம்
- கருணைச் சுவையை வெளிப்படுத்தும்.
- ஆரோகணம்: ஸ ரி1 ம1 ப த1 ஸ்<br>அவரோகணம்: ஸ் நி3 த1 ப ம1 க3 ரி1 ஸ
- இந்த இராகத்தில் ஷட்ஜம் சுத்த ரிஷபம் அந்தர காந்தாரம் சுத்த மத்திமம் பஞ்சமம் சுத்த தைவதம் காகலி நிஷாதம் ஆகிய சுரங்கள் வருகின்றன.
- ஆரோகணத்தில் க நி வர்ஜம்.
- இது உபாங்க இராகம் ஆகும்.
- ஜீவுஸ்வரங்கள் – ரி ம த
- நியாசஸ்வரம் ம ப த
- கிரகஸ்வரம் ஸ ப த
- பல்லவி சேஷய்யர் இந்த இராகத்தை எட்டு மணித்தியால நேரம் பாடியதாக சொல்லப்படுகின்றது
- பஞ்சம வர்ஜ சுரக்கோர்வைகளும்இ தாட்டு சுரக்கோர்வைகளும் இவ்விராகத்திற்கு அழகைக் கொடுக்கின்றன.
- இவ்விராகத்தின் ஆரோகண அவரோகண முறையை 22வது மேளத்தில் கையாண்டால் சாலகபைரவியும் 28வதுமேளத்தில்கையாண்டால்யதுகுலகாம்போதியும் 29வது மேளத்தில் கையாண்டால் ஆரபியும் கிடைப்பதைக் காணலாம்.
- உருப்படிகள்<br>வர்ணம்: ”ஸரஸூட” - ஆதி - கொத்தவாசல் வெங்கடராமய்யர்<br>கிருதி : ”ஸ்ரீராஜகோபால” - ஆதி - முத்துசுவாமி தீட்சிதர்<br>கிருதி : ”சம்கரி சம்குரு” - ரூபகம் - சியாமா சாஸ்திரிகள்<br>கிருதி : ”முருகா முருகா” - மிஸ்ரசாபு - பெரியசாமி தூரன்
- சஞ:சாரம;<br>ஸரிகமபதா - மபதஸ்ா - ஸ்நிதபதநிஸ்ா ஸரீக்ரிகா – ம்க்ரீஸா - ஸ்நீதபாம – கமபதநிஸ்நித பமகரிகமபதா – தபமரி - ஸரிமா ரிமதா - மதரரீ - ஸநிதா – பத - ஸரிஸா

## வினா இல 4 இற்கான புள்ளித்திட்டம்

**இராகத்தின் மேள எண் அல்லது தாய் இராகத்தின்**
**மேள எண்ணை குறிப்பிடின் - 1 புள்ளி**
**ஆரோகண அவரோகணம் - 1 புள்ளி**
**ஸ்வரஸ்தானம் - 1 புள்ளி**
**ஜீவ நியாச கிரக ஸ்வரங்கள் - 1 புள்ளி**
**இராக விபரம் - 2 புள்ளிகள்**
**(4 கருத்துக்கள் எழுதியிருப்பின் )**

**உருப்படிகள் இரண்டு எழுதியிருப்பின் - 2 புள்ளி**
**பொருத்தமான சஞ்சாரம் - 2 புள்ளி**
**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

- **இரண்டு இராகங்களுக்கு இலட்சணம் எழுதியிருப்பின 10 X 2 = 20 புள்ளிகள்**

## வினா இல – 5

### *இலட்சண கீதம்*

• பொதுவாக கீதம் என்ற சொல்லுக்கு பாட்டு என்று பொருள் எனினும் கர்நாடக இசையில் கீதம் என்பது இசை, சாகித்யம் இரண்டினதும் சேர்க்கை எனக் கருதப்படுகிறது.

• கீதம் இசை உருப்படிகளுள் மிகவும் எளிதானது.

• இது அப்பியாச வகைகளில் ஒன்று.

• அப்பியாச வரிசைகளை அடுத்து சாகித்திய ரூபமாக அமைந்த முதல் உருப்படி இதுவாகும்.

• எளிய வர்ண மெட்டில் இது அமைந்திருக்கும்.

• இதற்கு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் இல்லை.

• சங்கதிகள், கடினமான வக்ரப் பிரயோகங்கள் இதில் காணப்படாது. தாதுக்கள் இலகுவான நடையில் அமைந்திருக்கும்.

• தமிழிலும் தெலுங்கிலும் வடமொழியிலும் பல கீதங்கள் இயற்றப்பட்டுள்ளன. கீதம் ஆரம்பம் முதல் முடிணவ வரை தொடர்ச்சியாகப் பாட வேண்டும். இதில் சங்கதிகள் கிடையாது.

• ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் சாகித்தியத்தில் ஒரு எழுத்துத் தான் இருக்கும்.

• உதாரணம்- ஸரி / கா மா //

கண / நா தா //

•கீதம் இரண்டு வகைப்படும்.

1. சஞ்சாரி கீதம் அல்லது சாமான்ய கீதம்
2. இலட்சண கீதம்

இலட்சண கீதத்தின் சாகித்தியமானது இலட்சண கீதம் எந்த இராகத்தில் அமைந்திருக்கின்றதோ அந்த இராகத்தின் இலட்சணத்தை சாகித்தியத்தில் கொண்டிருக்கும்.

அதாவது அதன் இராகம், ஆரோகண அவரோகணம், ஸ்வரஸ்தானம், தாய்ராகம், வர்ஜ ஸ்வரம் வக்ரஸ்வரம் இராகவகை போன்ற விபரங்களைக் கொண்டு அதன் சாகித்தியம் இமைந்து இருக்கும். இந்த இந்த இலட்சண கீதத்தின் உதவியை கொண்டு அநேக இராகங்களின் சரித்திரங்களை அறியலாம்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்- | முகாரி ராகம் | - முகாரி | – ஆதி |
| | ஹரிகாம்போதி | - சுத்தசாவேரி | – கண்ட சாபு |

ஜனக இராகத்திலமைந்த இலடசண கீதங்கள் இராகாங்க இலடசணகீதங்கள் என அழைக்கப்படும். இவை 3 வகைப்படும்

1. சூத்திரகண்டம்
2. உபாங்ககண்டம்
3. பாஸாங்க கண்டம்
   சூத்திர கண்டத்தில் அந்த இராகத்தில் அமைந்துள்ள ஸ்வரஸ்தானங்களை குறிக்கும் எழுத்துக்கள் வரிசையாக கொடுக்கப்பட்டிருக்கும்
   ஊபாங்க கண்டத்தில் உபாங்க இராகங்களின் பெயர்களும் பாஸாங்ககண்டத்தில்பாஸாங்க இராகங்களின் பெயர்களும் கொடுக்கப்பட்டிருகடகும்

**இலட்சண கீதம் இயற்றியோர்**

1. பைடால குருமூர்த்தி சாஸ்திரி
2. வேங்கடமகி
3. க.பொன்னையாப்பிள்ளை

## கிருதி

- இசை வடிவங்களில் மிகச் சிறந்ததும் அரங்கிசை வகைகளில் மிக முக்கியமானதும் ஆகும்.
- தற்காலத்து அரங்கிசை நிகழ்ச்சிகளில் கிருதிகளைப் பாடுவதற்கு அல்லது இசைப்பதற்குத் தான் அதிகமான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஏனெனில் கிருதிகளை அதிகம் பாடும் போது அவற்றைப் பாடுவோர்க்கும் அவற்றைக் கேட்போருக்கும் அரியதோர் இசையின்பம் ஏற்படுகின்றது.
- பல இசைவாணர்களும் கிருதிகள் வழியாகப் பல அரும்பெரும் கருத்துக்களையும் தங்கள் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியுள்ளனர். கிருதிகளில்

கற்பனை சுரம் நிரவல் முதலியன பாடுவதற்கு ஏற்ற இடங்கள் உள்ளன. சம அதீத அநாகத எடுப்புகள் கிருதிகளில்கையாளப்படுகின்றன

- கிருதிகள் பல்லவி அனுபல்லவி சரணம் என்னும் பகுதிகளைக் கொண்டவை.
- சில கிருதிகளில் அனுபல்லவி இருக்காது. அப்போது சரணத்திற்கு "சமஷ்டி சரணம்" என்று பெயர். சில சமயங்களில் சரணங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவையாகவும் ஒரே தாதுவால் (சுரக் கோர்வை) அல்லது வெவ்வேறு தாதுக்களால் அமைக்கப்பட்டோ இருக்கலாம்.
- சாகித்தியம் இறைவனை பற்றியதாகவோஇ உலகியலைப் பற்றியதாகவோ இருக்கலாம்.
- கிருதியின் எல்லை 1 ½ ஸ்தாயி முதல் 2 ஸ்தாயி வரை உள்ளது.
- அனாகதஇ அதீத எடுப்புக்கள் கையாளப்படுகின்றன.
- கிருதிகள் எல்லா விதமான இராகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இராகங்களின் வடிவம் அழிந்து போகாமல் இருப்பதற்குக் கிருதிகள் தான் காரணம் என்று கருதப்படுகிறது.
- கிருதிகளை இயற்றியோர்
  - முத்துத் தாண்டவர்.
  - தியாகராஜர்.
  - சியாமா சாஸ்திரிகள்.
  - பாபநாசம் சிவன்
  - முத்துசுவாமி தீட்சிதர்

## தரு

- இவ் உருப்படியை கதைப்பாட்டு எனவும் அழைப்பர்
- ஒரு நிகழ்ச்சியையோ பழங்கதையையோ அழகாக விபரிக்கும் பாட்டிற்கு தரு என்று பெயர்
- தரு என்ற உருப்படியின் சாகித்தியம் சரித்திர சம்பந்தமானதாக அல்லது காதல் பாட்டாகவாவது இருக்கும். சில சமயங்களில் பிரபுக்களைப் புகழ்ந்து பாடுவதாகவும் இருக்கும்.

- இதில் அதிக சாகித்தியங்கள் மத்திம கால நடையில் காணப்படும். இதில் பல்லவி அனுபல்லவி சரணம் ஆகிய அங்கங்கள் காணப்படும்.
- . சரணங்கள் பலவற்றைக் கொண்டிருப்பது தருவின் மற்றொரு அம்சமாகும்.
- தருக்களில்சிலவற்றில்இரண்டுஅடிப்பாட்டுக்களாகவும் நான்கு அடிப் பாட்டுக்களாகவும் சொற்கட்டு சேர்ந்தவைகளாகவும் இருக்கின்றன.
- இசை நாடகங்களிலும் நாட்டியநாடகங்களிலும் இவை பெருமளவில் கையாளப்படுகின்றன
- அருணாச்சலக் கவிராயரின் இராம நாடகத்தில் பல மொழிகளில் அமைகின்ற பல தருக்கள் காணப்படுகின்றன.
- தருக்களில் ஜதிகள் பொருத்தப்படுவதுண்டு. தருக்களில் பல வகைத் தருக்கள் உண்டு.

- தருக்களின் வகைகளும் அவற்றின் விளக்கங்களும்
- பிரவேசிக்க தரு :- நாட்டிய நாடகத்தின் ஆரம்பத்தில் உறுப்பினர்களை அறிமுகப்படுத்தும் வகையில் அமையும் பாடல்
- .வர்ணனைத் தரு :- ஒரு நிகழ்ச்சிஇ இயற்கைக் காட்சிஇ ஒருவரின் பண்புஇ ஆகியவற்றில் ஒன்றை வர்ணிப்பதாக அமைந்துள்ள பாடல். ஊம் : இராம நாடகத்தில் மோகன இராகத்தில் அமைந்துள்ள கல்யாணத் தோகை அடித்த எனத் தொடங்கும் பாடல் சீதா தேவியின் திருமண நிகழ்ச்சிகளை சித்தரித்துக் காட்டுகின்றது.
- சம்வாதத் தரு :- இருவருக்குள் நடக்கும் வாக்குவாதத்தை சாகித்தியத்தில் கொண்டிருக்கும் பாடல். ஊம் : இராமநாடகத்தில் கல்யாணி இராகத்தில் மண்ணில் மெத்த அரசக்கோன் எனத் தொடங்கும் பாடல். இதில் இராமனுக்கும் பரசுராமனுக்கும் நடக்கும் தர்க்கத்தை விவரிக்கின்றது.
- ஸ்வாகதத் தரு :- தனக்குத் தானே உரையாடிக் கொள்ளும் விதத்தில் அமைந்துள்ள பாடல்.
- உத்தர பிரதி உத்தர தரு :- இருவருக்குள் நடக்கும் உரையாடலை சித்தரிக்கும் வகையில் அமைந்துள்ளது.
- ஜக்கினித் தரு :- சாகித்தியத்தின் முதல் பகுதியில் ஜதிகளையும் அடுத்த பகுதியில் வார்த்தைகளையும் கொண்டு மத்திம காலப் பிரயோகங்களையும் கொண்டு அமைந்துள்ள தருக்கள் ஆகும்.

- கோணங்கித் தரு :- தெய்வீகக் கோமாளி இசைக்கும் பாடல் கோணங்கித் தரு ஆகும். ஊம் : தெய்வீகக் கோமாளி
- கோலாட்டத் தரு :- கோலாட்டம் ஆடும் போது இசைக்கும் பாடல் கோலாட்டத் தரு ஆகும்.

**உருப்படி விளக்கம் - 8 புள்ளிகள்**
**இயற்றியவர் இருவர் - 2 புள்ளி**
**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

- **இரண்டு உருப்படிகயுக்கு இலட்சணம் எழுதியிருப்பின் வினா இல – 5 இற்கான மொத்த புள்ளிகள் - 20**

## ➢ வினா இல 6

### பைடாலகுருமூர்த்திசாஸ்திரிகள்

முசிறி நாட்டு தெலுங்குப்பிராமணர்

18 ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்

கானவித்யாதுரந்தர வேங்கட சுப்பார்யகுரோ என்ற நாடராக சப்ததாள கீதத்தின் மூலம் சொண்டி வெங்கட சுப்பையரின் சிஸ்யரென தெரிய வருகிறது

இலட்சண கீதங்களையும் சஞ்சாரி கீதங்கள் பிரபந்தங்கள் கீர்த்தனைகளையும் தன்னுடைய பெயரையே முத்திரயாக வைத்து சமஸ்கிருத மொழியில் இயற்றினார்

- தினம் ஒரு கீதம் இயற்றினார்
- சஞ்சாரி கீதங்களையும் இலட்சண கீதங்களும் மிகப்பிரசித்தமானவை
- கீதங்களைச் செய்தவர்களுள் புரந்தரதாஸருக்கு அடுத்ததாக கூறப்படுகிறார்
- கீதங்களின் சாகித்தியம் பகவத் ஸ்தோத்திரமாக இருக்க வேண்டுமெனும் நிபந்தனை இருந்த போதிலும் குருபரமாகக் கூடச் செய்யலாம் என்பதற்கு இக்கீதம் சாட்சி
- கன நய தேசிய பாடும் முறையில் இவர் சிறந்த வித்துவான்
- பைடால குருமூர்ததி சாஸ்திரிகள் வீணைக் குப்பையர் தச்சூர் சிஙகராச்சாரியார் திருவொற்றியூர் தியாகைய்யர் முதலிய பெரியோர்களின் முயற்சியினாலும் சென்னை சங்கீத வித்தைக்கு ஒரு முக்கிய பீடமாக விளங்குகிறது
- 1000 கீதங்களைச் செய்தமையால் வெயிகீத பைடால என்றும் 40 000 இராகஇலட்சணங்களை அறிந்திருந்தமையால் நலுவதிவேல ராகால பைடால குருமூர்தி எனவும் போற்றியுள்ளனர்

இவரது முத்திரை குருமூர்த்தே

இவரது சீடர்கள் கூடாலே'ஸஸய்யர், சோபனாத்திரி

- ஆஸ்திரேலியாவில் Salzburg - 1756
- தந்தை -லியோபோல்ட் தாயார்பெயர் - அன்னாமரியா
- ஹார்ப்ஸிகொர்ட் வயலின் பழகுபவராக விளங்கினார்
- 3 வயதில் இசை பயில தொடங்கினார்
- 5 வயதில் மைனூாட்ஸ் எழுதத் தொடங்கினார்
- சிறு வயதிலேயே - பியானோ கொன்சார்ட்டோ எழுதினார்
  இவரது திறமையைக்கண்டு தந்தை ஐரோப்பாவிற்கு அழைத்துச் சென்றார்
- 7 வயதில் வியன்னாவில் வயலின் வாசித்தார் சகோதரியும் வாசித்தார்
  மிஸ் மொஸாட் மாஸ்ரர் மொஸாட என்பரபல்யம் ஆயினர்
- 3ம் ஜோர்ஜ் மன்னன் அரசி ஸ்ரோட முன் வயலின் வாசித்தனர்
- 12 வயதில் 2 நாடகங்கள் இயற்றினார்
- மிலன் இத்தாலி ரோம் Florence போன்ற இடங்களுக்கு சென்று இசை நிகழ்ச்சிகள் நடத்தினார்
- இத்தாலியில் 3 சிம்பனிகளை இயற்றினார்
- philharmonic academy இல் அங்கத்தவரானார்
- aseanioinalba, luciosilla போன்ற நாடகங்களை மில் நகரில் இயற்றினார்
- மியூனிச் நகரில் ஹாஸ்ய நாடகமாகிய lafintagiardini era எனும் கேய நாடகத்தை எழுதினார்
- பியானோ concerto ஐக்களையும் ஓர்கன் வாத்தியத்தில் வாசிக்க கூடிய பாடல்களையும் மிகப் பிரபல்யமான haffner serenade ஐயும் எழுதினார்
- aespetits – riens என்ற பலேயையும் பாரிஸ் symphony யும் இயற்றினார்
- marriage of Figaro 1786 இல் எழுதப்பட்டது
- don Giovanni , cosifantutte போன்றவற்றையும் எழுதினார்
- மோஸாட் the magi fiute என்ற நூலை கி.பி 1791 ஆண்டு வீதிய போது மர்மமான ஒரு மனிதரை சந்தித்தார் -அவர் கறுப்பு அங்கி அணிந்திருந்தார்
- requienmass எனும் மரணச்சடங்கிற்கு பாடப்படும் இசையை எழுதும் படி பணித்தார்

  அதை எழுதத்தொடங்கும் போதே தனக்காக எழுதப்பட்டதோ என நினைத்துப்பயந்தார் அவர் பயந்தது போலவே அதனை எழுதி முடிக்கும் முன்பே இறந்து விட்டார்

## அருணகிரிநாதர்

- வடஆற்காடு மாவட்த்தில் திருவண்ணாமலையில் 15ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்
- தாய் - முத்தம்மை
- தந்தையர் - திருவெண்காடர்
- காவிரிபூம்பட்டினம்
- முருகன் கைலேந்தியமை – பாடல்கள் இயற்றும் ஆற்றல் - துறவறம்
- முத்தைதரு பத்திருநகை என முருகன் அடி எடுத்துகொடுத்தார்
- தமிழ் சமஸ்கிருத மொழிகளில் புலமை பெற்ற மிகப் பெரிய கவி
- இசைக்கு பொருத்தமான பல சந்தங்கள் - இதனால் சந்தப்பாவலர்
- 16 000 பாடல்கள் இயற்றினார். 1367 பாடல்களே நூலாக உள்ளது.
- தாயுமானவர் பிற்காலத்தில் வாக்கிற்கு அருணகிரி என்று புகழ்கிறார்
- திருப்புகழ்களை பாடியுள்ளார் (முருகபக்தி பொலிவு )
- 35 108 175 தாளங்களிலும் 52 அபூர்வ தாளங்களிலும் திருப்புகழ்கள் பாடியுள்ளார்
- சங்கீர்ண தாள அமைப்புக்களையும் பல சிக்கலான தாள அமைப்புக்களையும் பாடல்கள் மூலம் விளக்குகின்றார்
- பஞ்கதிபேததாளம்
- பிரஸ்தார கிரமங்களினால் உண்டாகும் தாளம்
- அன்னியதாளம் விசமதாளம்
- சந்ததாளம்
- திருப்புகழ் தவிர கந்தர் அநுபூதி கந்தர் அலங்காரம் ஆகியவற்றை இயற்றியுள்ளார்
- இவரது பூதவேதாள வகுப்புபாடல்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை
- இவைகளில் சமஸ்கிருத இராகங்கள் 108 தாளங்கள் தமிழ்ப்பண்புகளும் தாள வாத்திய குறிப்புக்களும் உள்ளன.
- பிரபுடதேவமகாராஜர் 1450 திருவண்ணாமலை – மகாராஜா - மூலிகை – கிளி வடிவம் - கூடுவிட்டுகூடுபாயும் சக்தி – விரோதிகள் எரிப்பு – எஞ்சிய வாழ்நாள் - கிளிவடிவம்
- மணலிமுத்துக்கிரு'ணபாகவதரால் கனகாபி'ேகம் இசைஞானியர் தாளச் செல்வர் சந்தப்பாவலர் பெருமான் முத்தமிழ்அரசு வாக்கிற்கு அருணகிரி– நவரசநாயகர்

**பத்கண்டே**

- பம்பாய் - கி.பி. 1860 ஆவணி 13 ம் திகதி
- தந்தை - நாராயணராவ் தாய்- ஏக்தார்
- இசைச்சூழல் - 10 வயதில் புல்லாங்குழல் திறமை –பல பரிசில்கள்
- பம்பாம் - கஜான் உதேஜாக் என்ற இசைச் சங்கத்தில் சேர்ந்து
- 72 மேளகர்த்தா போன்ற சங்கீத கிரந்தங்களையும் கற்றுக் கொண்டார்
- பல இலட்சண கீதங்களைம் இயற்றி உள்ளார்
- எல்லா இராகங்களிலுமமைந்த உருப்படிகளைக் கொண்ட ஸ்வரமாலிகா நூலை வெளியிட்டார்
- 1910 ம் ஆண்டில் ஹிந்துஸ்தானிராகங்கள் பற்றிய விளக்க நூலை வெளியிட்டார்
- 10 தாட் முறையையும் பிலாவலை அடிப்படை ராகமாகவம் அறிமுகப்படுத்தியவர்.
- இலட்சணசங்க்ரஹ எனும் நூலை வெளியிட்டார்
- 150 இராகங்களை விளக்கும் ஹிந்துஸ்தானி சங்கீத பத்ததி நூலை மராத்தி மொழியில் வெளியிட்டார்
- 1200 பிரபல சம்பிரதாயமான பாடல் வகைகளை தொகுத்து கிராமிக் புத்தக மாலா எனும் நூலை வெளியிட்டார்
- A compertive syudy of music of 15th 16Th 17th and 18 centuries
- A historical survey of the music of upper india என்ற இரு நூலையும் வெளியிட்டார்
- அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட சங்கீத லிபிமுறை உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது
- பல கருத்தரங்குகளை பரோடா டெல்லி லக்னௌ போன்ற இடங்களில் ஒழுங்கு செய்தார்
- கவாலியர் மகாராஜாவின் உதவியுடன் கவாலியில் மாதவ கல்லூரியை நிறுவினார் . மாரிஸ் இசைக்கல்லூர்ரியும் இவர் முயற்சியினால் நிறுவப்பட்டது
- பாரிச வாத நோயினால் பாதிக்கப்பட்டு 1956 ம்ஆண்டு காலமானர்

**வினா இல 6 புள்ளித்திட்டம்**

**வாக்கேயகார் நான்கு பேரையும் இனங்கண்டு எழுதியிருப்பின் - 4 புள்ளிகள்**
**ஒருவரது இசைத்தொண்டுக்கு - 8 புள்ளி**
**இருவரது இசைதொண்டு எழுதியிருப்பின் - 8 + 8 = 16 புள்ளிகள்**
**(மொத்தம் 16 + 4 = 20 புள்ளிகள்)**

**வினா இல 7**

## மத்திமகால சாகித்தியம்

கிருதியின் ஏதாவது ஒரு அங்கத்தின் முடிவில் உள்ள ஆவர்த்தனங்கள் துரித நடை மாற்றம் பெற்று மத்யம காலத்தில் அமைவதே மத்யமகால சாகித்தியம் ஆகும்.

சௌக்க நடையில் பொதுவாகச் செல்லும் கிருதிகளுக்கு அணியாக விளங்குவது மத்திமகால சாகித்தியம் ஆகும். இது கிருதியின் ஏதாவது ஒரு அங்கத்தின் முடிவில் அமைந்திருக்கும். முத்துஸ்வாமி தீஷிதரின் பல கிருதிகள் மத்திம காலசாகித்தியத்தைக்கொண்டிருக்கும்

எடுத்துக்காட்டுக்கள் :- ”ஆடிக்கொண்டார்” (மாயாமாளவகௌளை - ஆதி - முத்துத் தாண்டவர்) இங்கு சரணத்தில் மத்திமகால சாகித்தியம் காணப்படும்.

ஸ்ரீசரஸ்வதி - ரூபகம் - முத்துஸ்வாமிதீட்சிதர்
காமாட்சி காமகோடி – சிம்மேந்திமத்திமம் - தீட்சிதர்

## மார்க்கம்

இது மாத்திரையின் கால அளவைக் கொண்ட ஆறு காலத்தினைக் குறிக்கும் 4 அடசரங்களின் அளவைக் கொண்டது (சதுஸ்ரலகு) ஒரு மாத்திரை ஆகும்

தாளத்தின் ஒரு அட்சரத்துக்குள் எத்தனை சுரங்கள் அடங்கும் என்பதை மார்க்கம் வரையறுக்கிறது. சரியான முறையில் தாளம் போடவும் உருப்படிகளை சரியான சுர-குறிப்புகளில் எழுதவும் மார்க்கம் உதவுகிறது.

ஆறு மார்க்கங்கள் உள்ளன. அவை ஷண்மார்க்கங்கள் என்றழைக்கப்படுகின்றன. முதல் மூன்று பல்லவி பாடவும் பின் மூன்று வர்ணங்கள் கிருதிகள் போன்ற இதர இசை வடிவங்களுக்கும் பயன்படுகின்றன.

| மார்க்கம் | களைகள் | ஒரு தாள அட்சரத்துக்கு ஸ்வரங்கள் |
|---|---|---|
| 1. தட்சிணம் | 8 | 12 |
| 2. வார்த்திகம் | 4 | 16 |
| 3. சித்ரம் | 2 | 8 |
| 4. சித்ரதரம் | 1 | 4 |
| 5. சித்ரதமம் | ½ | 2 |
| 6. அதி சித்ரதமம் | ¼ | 1 |

## கதி பேதம்

அட்சர காலத்தின் உட்பிரிவு மாத்திரை ஆகும். அதாவது இரண்டு

அட்சரங்களுக்கு இடைப்பட்ட நேரத்தை மாத்திரைகளினால் பிரிக்கின்றோம். அவ்வாறு

ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றோம் அவையாவன,

திஸ்ரகதி - 3 மாத்திரை

சதுஸ்ரகதி - 4 மாத்திரை

கண்டகதி - 5 மாத்திரை

மிஸ்ரகதி - 7 மாத்திரை

சங்கீர்ணகதி - 9 மாத்திரை

ஜாதி பேதம் லகு எனும் அங்கத்திற்கு மாத்திரமே உரியது ஆனால் கதி பேதமானது தாளத்தில் வரும் ஒவ்வொரு அங்கத்திற்கும் ஏறபட்டதாகையால் த்ருதம் அனுத்ருதம் இவற்றின் அட்சரகாலங்களுக்கும் கதி பேதம் உண்டு

## உபயவக்ர இராகம்

வக்ர இராகம் எனபது ஜன்னிய இராகப்பிரிவுகளுள் ஒன்று. ஆரொகணத்திலோ அல்லது அவரோகணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் நேராகச் செல்லாமல் திரிந்து செல்லும் இராகம் வக்ரராகம் எனப்படும் இதில் 3 வகை உண்டு ஆராகணம் மட்டும் வக்ரமாயுள்ளவை அவரோகணம் மட்டும் வக்ரமாயுள்ளவை ஆரோகணம் அவரோகணம் இரண்டும் வக்ரமாயுள்ளவை

மேற் குறழப்பிட்ட பிரிவுகளுள் ஆரோகணம் அவரோகணம் இரண்டும் வகரமாயுள்ள இராகங்கள் உபய வக்ர இராகங்கள் எனப்படும்

உதாரணம் ரீதிகௌளை - ஆரோகணம் - ஸகரிகமநிதமநிநிஸ்

அவரோகணம் - ஸ்நிதமகமபமாகரிஸ

**விவாதிமேளங்கள்**

விவாதி மேளங்கள் என்பவை விவாதி ஜ்வரங்களை உடைய மேளங்களாகும் ' இவற்றில் சுத்தகாந்தாரமும் ஷட்சுருதிரிஷபமும் சுத்தநிஷாதமும் ஷடசுருதிதைவதமும் ஆகியநான்கு விவாதி ஸ்வரங்களில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு ஸஇவரங்கள் வரும்இரண்டு விவாதி ஸ்வரங்களுக்கு மேல் ஒரு மேளத்தில் வராது அவ்வாறு வரின் ஒன்று பூர்வாங்கத்தலும் மற்றொன்று உத்தராங்கத்திலும் இருக்கும்

விவாதி தோஷத்திற்குட்பட்ட மேளங்களின் இலக்கங்கள்
1 – 6 1 வது சக்கரம்
31 – 36 – 6 வது சக்கரம்
37 – 42 – 7 வது சக்கரம்
67 – 72 - 8 வது சக்கரம்
இந்த 4 சக்கரங்களலுமுள்ள 24 மேளங்களைத்தவிர மீதி 8 சக்கரஙடகளில் ஒவ்வொரு சக்கரத்தின் ஆரம்ப மேளமும் இறுதி மேளமும் விவாதி தோஷத்திற்குட்பட்டவை ஆகவே விவாதி மேளங்களின் தொகை 40 விவாதி தோஷமற்ற மேளங்களின் தொகை 32 ஆகும்

**5x4 = 20 புள்ளிகள்**

## வினா இல 8

### கர்நாக இசை இந்துஸ்தானி இசை ஒற்றுமைகள்

- 7 சுவரங்கள் 12 சுவரஸ்தானங்கள் 22 சுருதிகள் வாதி சம்வாதி விவாதி அனுவாதி என்பன யாவும் இவ்விரு இசைகளுக்கும் பொதுவான அம்சங்களாகும்.
- கருநாடக சங்கீதத்தில் 72 மேளகர்த்தாக்கள் (தாய் ராகங்கள்) இருப்பதைப் போன்றே ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் 10 தாட்கள் உண்டு.

- கர்நாடக இசையின் பாதிப்பினால் ஹிந்துஸ்தானி இசை கச்சேரிகளில் இப்போது வயலின் வாசிக்கப்படுகிறது.

- கீர்த்தனை கிருதியில் உள்ள பல்லவி அனுபல்லவி போன்ற அங்க வேறுபாடுகளை ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஸ்தாயியில் அந்தரா எனக் கூறுவர்.

- கஸல் என்னும் ஹிந்துஸ்தானி உருப்படி வகை கர்நாடக சங்கீதத்தில் ஜாவளிக்கு ஒப்பானது. தும்ரி என்பது பதத்திற்கும் தரானா என்பது தில்லானாவுக்கும் ஒப்பானது.

- மந்த்ரஸ்தாயி மத்யஸ்தாயி தாரஸ்தாயி என்னும் 3 ஸ்தாயிகளும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் மந்த்ரசப்தக மத்யசப்தக தாரசப்தக என அழைக்கப்படுகின்றன.

- தாய் ராகங்களை ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் "தாட்" என அழைப்பர்.
- தாட் ராகத்திற்கான அம்சங்கள்:
    - 7 ஸ்வரங்களையும் கொண்டிருத்தல்
    - ஸ்வரங்கள் கிரமகதியில் செல்லுதல்
    - ஒரே ஸ்வரத்தின் கோமள தீவிர பேதம் இரண்டும் அடுத்தடுத்து தாட்டில் வரலாம்.
    - தாட் ஆரோகணத்தை மட்டும் கொண்டதாகும்.
- ஊம்: ஸ ரி க ம ப த நி ஸ் (கரகரப்பிரியா) காபிதாட்டைக் குறிக்கும்.
    - தாட் ரஞ்சகத்தை அளிக்க வேண்டிய அவசியமில்லை.
    - ஒவ்வொரு தாட்டும் அத்தாட்டிலிருந்து பிறக்கும் ராகத்தின் பெயரைக் கொண்டு விளங்கும்.
- ஊம்: காபிதாட் அதிலிருந்து பிறந்த பிரபல்யமான காபியின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது. ஹிந்துஸ்தானியில் இவ்வாறான 10 தாட்கள் உண்டு. இவற்றிலிருந்தே இராகங்கள் பிறக்கின்றன.

- கர்நாடக சங்கீதத்தில் உள்ளது போன்றே இராகங்கள் ஔடவ ஷாடவ சம்பூர்ண என ராகங்களில் உள்ள ஸ்வரங்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து பிரிக்கப்படுகின்றன.
- ஔடவ ராகம்: பூபாலி ஹிந்தோளம் ஷாடவ ராகம்: மார்வா பூர்யா சம்பூர்ண ராகம்: யமன் பிலாவல்

- கர்நாடக சங்கீதம் போன்றே ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் பாடகர் தம் குரலுக்கு உகந்த சுருதியை தேர்ந்தெடுக்க சுதந்திரம் உண்டு

- . கர்நாடக சங்கீதத்தில் தம்புராவை சுருதி கூட்டும் போது பஸஸஸ என்று கூட்டப்படுகிறது. ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் அவ்வாறே.

- கர்நாடக சங்கீதத்தைப் போல் ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் 7 ஸ்வரங்களும் கோமள தீவிர பேதத்தினால் 12 ஸ்வரஸ்தானங்களாகின்றன.

- இரு சங்கீதங்களிலும் மனோதர்மம் இன்றியமையாததாகும்.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஆலாபனையை ”ஆலாப்” என்றழைப்பர். ஆலாப் 4 பிரிவுகளாகப் பாடப் படுகிறது. 1. ஸ்தாயி 2. அந்தரா 3. ஸஞ்சாரி 4. ஆபோக்
- ஜோட் என்பது ஆலாபனையை மத்திம காலத்தில் பாடுவதாகும்.
- இது ஓரளவு கர்நாடக சங்கீதத்தில் தானம் பாடும் முறைக்கு ஒத்ததாகும்.

## கர்நாடக இசை, மேலைத்தேச இசை வேற்றுமைகள்

- 72 தாய் ராகங்கள் உண்டு. மேஜர்ச்கேல் மைனர்ச்கேல் என 2 மேளம்.
- இராகத்தை விஸ்தாரமாகப் பாடலாம். Notation லிருந்து வாசிக்கலாம்.
- கமகங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு இல்லை.
- வாய்ப்பாட்டு இசைக்கு கூடுதல் முக்கியத்துவம். கூட்டு வாத்திய இசைக்கு கூடுதல் முக்கியத்துவம்.
- இசையை விளக்க வீணை வாத்தியம். எல்லா நுட்பத்தையும் கொண்ட பியானோ.
- பஞ்சகதி பேதம் உண்டு. சதுஸ்ரகதி திஸ்ரகதி பேதங்களே உண்டு.
- கச்சேரியில் 2-5 பேர் பக்கவாத்தியம் வாசிப்பர். அதிக வாத்தியக்காரர் கலந்து கொள்வர்.
- தெய்வ சங்கீதம். லௌகீக சங்கீதம்.
- சரிகமபதநி- சப்தசுவரங்கள். CDEFGAB- 7 சுவரங்கள்.

- பாடல் எழுதுவது- script notation எனப்படும். பாடல் எழுதுவது- staff notation எனப்படும்.
- குரல் வளத்திற்கு ஏற்ப சுருதியை நிர்ணயிக்கலாம். பாடல் எந்த சுருதியில் உள்ளதோ அதிலேயே பாட வேண்டும்.
- இன்னிசை எனப்படும். ஒத்திசை எனப்படும்.
- மனோதர்ம சங்கீதம் உண்டு. அவ்வாறில்லை.
- பெருமளவு ராகம் தாளம் உண்டு. அவ்வாறில்லை
- ஒரு சுவரத்தின் பின்பே அடுத்த சுவரம் ஒலிக்கும். ஒரே நேரத்தில் பல சுவரம் ஒலிக்க முடியும்.
- மெலடிக்கல் இசை. ஹார்மனிக்கல் இசை.
- சங்கராபரணத்தை அடிப்படையாக வைத்து Notation எழுதப்படும். அவ்வாறில்லை.
- 22 சுருதி போன்ற நுட்ப சுருதிகள் பயன்படுத்தப்படும். நுட்ப சுருதிகள் இல்லை.
- பாட்டை கற்க ஆசிரியர் வேண்டும். Notation ஐப் பார்த்து கற்பது கடினம். Notation ஐப் பார்த்து வாசிக்கலாம்.
- இராக ஆலாபனை முக்கிய இடம் வகிக்கிறது. சுருதியை அடிக்கடி மாற்றி வாசிப்பதைக் காணலாம். ராகம் என்பது கிடையாது.

**வினா இல 8 புள்ளித்திட்டம்**

**ஓவ்வோரு விடயம் பற்றியும் 10 கருத்துக்கள் எழுதியிருப்பின் - 10 புள்ளிகள்**

- **மொத்தம் 10 x 2 = 20 புள்ளிகள்**